4. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

109. சென்னைப் பெருநகர்ப் பகுதிக்கான பெருந் திட்டத்தில் மாற்றம் செய்வது குறித்து வீட்டு வசதி—நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 3—10—1983 ஆம் நாளிட்ட 1459 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர—நாட்டுப்புற திட்டச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 35/1972) 123 (3) பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது).

110. சென்னைப் பெருநகர்ப் பகுதிக்கான பெருந் திட்டத்தில் மாற்றம் செய்வது குறித்து வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 26—10—1983 ஆம் நாளிட்ட 1519 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர—நாட்டுப்புற திட்டச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 35/1972) 123 (3) பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது).

111. சென்னைப் பெருநகர்ப் பகுதிக்கான பெரும் திட்டத்தில் மாற்றம் செய்வது குறித்து வீட்டு வசதி—நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 26—10—1983 ஆம் நாளிட்ட 1520 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர—நாட்டுப்புற திட்டச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 35/1972) 123 (3) பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது).

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் ஏனைய தாள்கள்

*46. சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு பயணிப் பேருந்துகள், ஒப்பந்தப் பேருந்துகள் (கையகப்படுத்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 10/1984).

*47. சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1984 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல், தமிழ்நாடு மாவட்டக் காவல் (திருத்த) சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 40/1983).

*48. சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு பொது விற்பனைவரி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 11/1984).

49. உடுக் குறியிடப்படாத 1 முதல் 60 வரையிலான வினாக்களுக்கான விடைகள்.

---

* 7—3—1984 அன்று மேலவை உறுப்பினர்கள் அனைவருக்கும் சுற்றோட்ட முறையில் அனுப்பப்பட்டது.